KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) Nov 2026

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts603112026.50

UGC Approved by Transparent Peer Review

RESEARCH ARTICLES

கவி கா.மு.ஷெரீபின் 'நபியே எங்கள் நாயகமே! ' - சதக இலக்கியமா?

"Sathakam or Eulogy? A Critical Study of K.M. Sheriff's Nabiye Engal Nayagame"

Dr. U. Alibava[1,*iD]

[1] Professor & Head, Department of Tamil Studies, Bharathidasan University, Tiruchirappalli - 620 024. Tamil Nadu, India.

***Corresponding author:** Dr. U. Alibava, alibavapkm@gmail.com

ORCID iD: Dr. U. Alibava https://orcid.org/0000-0002-2051-7002

ARTICLE INFO

Article history
Received: 25 October 2026
Revised: 30 October 2026
Accepted: 5 November 2026
Published: 12-November-2026

Article ID
KIJTS-2026-0030

Peer review
Double-blind peer review

Keywords
K.M. Sheriff
Nabiye Engal Nayagame
Tamil Islamic Literature
Satakam Literature
Prophet Muhammad
Literary Structure
Genre Classification
Islamic Ethics

ABSTRACT

This article examines the structure and literary classification of K. M. Sheriff's Tamil work "Nabiye Engal Nayagame!" with particular attention to its relationship to the Islamic satakam tradition. The study first outlines the general features of satakam literature, a minor literary genre conventionally associated with a composition of one hundred verses organized around a central subject and often marked by a recurring refrain. It then considers the author's background and the religious and ethical concerns expressed in the work. The text praises Prophet Muhammad (peace be upon him), presenting episodes from his life and teachings alongside Islamic beliefs, duties, and moral values. The section titled "Nannabi Vazhthup Pamalai" consists of one hundred verses, composed in the same metrical form and linked by the recurring concluding phrase "Vazhiyaro Vazhi." The article also notes that the complete work contains 114 verses, including additional material beyond this hundred-verse section. Although the work shares certain formal features with satakam literature—such as its central subject, verse count within a section, and refrain—the article argues that the whole composition does not fully conform to the conventional structural requirements of a satakam. It therefore concludes that "Nabiye Engal Nayagame!" is more appropriately understood as a work of praise dedicated to Prophet Muhammad than classified simply as a satakam. Through this structural examination, the article highlights the importance of genre criteria when classifying Tamil Islamic literary works.

How to cite this article: Dr. U. Alibava (2026). கவி கா.மு.ஷெரீபின் 'நபியே எங்கள் நாயகமே! ' - சதக இலக்கியமா? *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 596–606. https://doi.org/10.63300/kijts603112026.50
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முனைவர் உ. அலிபாவா

பேராசிரியர் & தலைவர்

தமிழியல்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - 620 024.

Email : alibavapkm@gmail.com, https://orcid.org/0000-0002-2051-7002

பரந்து விரிந்த இஸ்லாமிய இலக்கியப் பரப்பில் சதக இலக்கியமும் ஒரு வகையாகும். இவ்வகை இலக்கியத்திற்கெனத் தனிவகை அமைப்பு முறைகள் உள்ளன. நூறு பாடல்களைக் கொண்ட அமைப்பிற்குச் சதகம் என்று பெயர். ஆனால் நூறு பாடல்களில் பாடப்பெற்ற எந்த ஓர் இலக்கியமும் சதகமாகாது. அவ்வகையில் கா.மு. ஷெரிப் பாடிய 'நபியே எங்கள் நாயகமே' என்ற நூல் முழுமையும் சேர்த்து நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களைக் கொண்டுள்ளது. இதில் 'நந்நபி வாழ்த்துப் பாமாலை' என்கிற பகுதி மட்டும் நூறு பாடல்களைப் பெற்றமைந்துள்ளது. கவிஞர் தனது பிற நூல்களின் (பல்கீஸ் நாச்சியார் காவியம், தமிழரின் சமய நெறி) பின்னட்டைகளில் இந்நூலைப் பற்றிக் குறிப்பிடும் போது பிறை அடைப்புக் குறிக்குள் 'சதகமுறைக் காவியம்' என்றும், சீறாப்புராணம் நுபுவத்துக் காண்டம் மூலமும் உரையும் பாகம் ஒன்றில் உரை ஆசிரியர் உரையில், "1972ஆம் ஆண்டில் இஸ்லாமிய இலக்கியப் பணியில் ஈடுபடுமாறு என்னை எனது இலக்கிய வழிச் சோதரர் திரு. கலைமாமணி ரா. வேங்கடாசலம்பிள்ளை வலியுறுத்தி ஈடுபட வைத்தார். அதன் பயனாக 'நபியே எங்கள் நாயகமே' என்னும் சதக முறைக் காப்பியம் தோன்றலாயிற்று" (பக்.52-53) என்றும் குறிப்பிடுகின்றார். இவ்வகையில் இவர் எழுதிய முதல் இஸ்லாமிய இலக்கியமும் இதுவே. இந்நூலைச் சே.மு.மு. முகமதலி தம்முடைய திருநபிச் சதகப் பதிப்புரையில் சதக இலக்கிய வரிசையில் சேர்க்கிறார். ஆனால் 'நபியே எங்கள் நாயகமே' எனும் இந்நூல் சதக இலக்கியமா என்பது ஐயத்திற்கிடமாக உள்ளது.

கா.மு. ஷெரீப்

தஞ்சை மாவட்டம், குடவாசல் வட்டம், அபிவிருத்தீஸ்வரம் என்னும் ஊரில், விவசாயக் குடும்பத்தில் 1914ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பதினோராம் நாள் கா.மு.ஷெரீப் பிறந்தார். இவரது பெற்றோர் காதர்ஷா, இபுராகிம் பாத்தும்மாள் ஆவர். பெற்றோர் கல்வி கற்ற நிலையிலும் வறுமை காரணமாக இவர் பயிலும் வாய்ப்புப் பெற்றிலர். இவர் தானாக முயன்று தந்தையாரிடமும், மற்றோரிடமும் கல்வி கற்றுக் கவி புனையும் திறனும் பெற்றார்.

கா.மு. ஷெரீப் உயரிய பண்பின் உறைவிடம்; மனித நேயம் மிக்கவர். இவரைப் பற்றி ஜெயகாந்தன் "கவி. கா.மு ஷெரீப் அவர்களின் படைப்பை விடவும், அவரது பாடல்களை விடவும், அவரையும் அவரது குணாதிசயங்களையும் நான் அதிகம் மதிக்கின்றேன்" என்று குறிப்பிடுகிறார். இவர் பெரியாரின் சுயமரியாதை இயக்கம், இந்திய தேசியக் காங்கிரஸ் போன்ற இயக்கங்களில் இருந்தவர். 1938ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர். 1942ஆம் ஆண்டு நடந்த வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கு பெற்றவர். 1948ஆம் ஆண்டு 'ஒளி' என்ற இதழ் நடத்தியும், 1969-ஆம் ஆண்டு 'சாட்டை', 'தமிழ் முழக்கம்' என்னும் இரு இதழ்கள் நடத்தியும் பத்திரிக்கைத் துறையில் அனுபவமிக்கவராய்த் திகழ்ந்தார். "பொன்முடி' என்ற திரைப்படத்திற்கு முதன் முதலில் பாடல் எழுதத் துவங்கி தொடர்ந்து நானூற்றுக்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களை எழுதியுள்ளார்.

இவரது படைப்புக்களைப் பொதுவான இலக்கியங்கள் என்றும், இஸ்லாமிய இலக்கியங்கள் என்றும் இருபெரும் பிரிவுகளாகப் பகுக்கலாம். இவர் தமது அறுபது வயதுக்கு முன்பு எழுதிய இலக்கியங்களைப் பொதுவான இலக்கியங்கள் என்றும், அறுபது வயதுக்குப் பின்பு எழுதிய இலக்கியங்களை இஸ்லாமிய இலக்கியங்கள் என்றும் குறிப்பிடலாம். இவரது படைப்புக்கள் சீறாப்புராண உரை, கவிதை, நாவல், சிறுகதை, நாடகம், சொற்பொழிவு, கடிதம், கட்டுரை, வரலாறு, ஆய்வு எனப் பல தளங்களில் உள்ளன. முப்பதுக்கும் மேற்பட்ட இஸ்லாமிய இலக்கியங்களைப் படைத்துள்ள இவர் 1960-70ஆம் ஆண்டிற்கான கலைமாமணி விருதினைப் பெற்றுள்ளார்.

1994ஆம் ஆண்டு ஜூலை ஏழாம் நாள் தமது எண்பதாவது வயதில் இவர் இயற்கை எய்தினார்.

சதகம்

தொண்ணூற்றாறுக்கும் மேற்பட்டு வளர்ந்து பல்கியுள்ள சிற்றிலக்கியங்களில் சதகமும் ஒன்று. "அகப்பொருளையோ அல்லது புறப் பொருளையோ அடிப்படையாக வைத்து, யாதானும் ஒரு பொருள் மீது நூறு பாடல்களால் பாடப்பெறும் இலக்கிய அமைப்பே சதகம் என்பது " என்று ந.வீ. செயராமன் (சிற்றிலக்கியச் செல்வம், ப.108) கூறுகிறார்.

"பொதுவாக மக்களின் நல்வாழ்விற்குத் தேவையான அறநூற் கருத்துக்களையும், நீதிகளையும், ஒழுக்கக் கூறுகளையும் வழங்கி அவர்களை வாழ்வாங்கு வாழச் செய்யும் இயல்பினது சதக இலக்கியம் எனலாம். அதாவது, மக்களின் உணர்வில் பதியுமாறு அறம், பொருள், இன்பம், வீடு பற்றிய செய்திகள், அகம், புறம் பற்றிய செய்திகள் சதகம் வாயிலாகக் கூறப்பட்டுள்ளன எனலாம்" என்கிறது வாழ்வியற் களஞ்சியம் (தொகுதி எட்டு, ப. 337).

சதக இலக்கியத்திற்குரிய இலக்கணத்தை இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் போன்றவை விளக்குகின்றன.

சதகங்கள் ஒரு காலத்தில் மக்களைக் கவர்ந்த மக்கள் இலக்கியங்களாக விளங்கின. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய திருவாசகத்தில் இடம்பெற்றுள்ள திருச்சதகத்தின் வாயிலாக மணிவாசகப் பெருமானால் தமிழிற்கு அறிமுகமான சதக இலக்கியம், தனி ஓர் இலக்கியமாக கி.பி. பதினோராம் நூற்றாண்டில் உருப்பெற்றது. அவிநாசி ஆறை கிழார் எழுதிய கார் மண்டல சதகம் சதக இலக்கியங்களுள் முதலாவதாகும். இதனைத் தொடர்ந்து வளர்ந்து பல்கிய சதகங்களின் எண்ணிக்கை 107 என்று 'தமிழில் சதக இலக்கியங்கள்' என்ற நூலில் ப. பழனியம்மாளும், 125 என்று 'சிற்றிலக்கிய ஆராய்ச்சி' என்ற நூலில் இரா. கண்ணனும், 215 என்று 'சதகத் திரட்டு" தொகுதி இரண்டில் த. இராசேசுவரியும் குறிப்பிடுகின்றனர். ஆனால் இப்போது பட்டியலிடின் இவ்வெண்ணிக்கை அதிகரிக்கும் என்பது திண்ணம். இவற்றில்

சைவசமயத்திற்க்கு அடுத்த நிலையில் முப்பதுக்கும் மேற்பட்ட சதக நூல்களை இஸ்லாமிய இலக்கியம் பெற்றுள்ளது.

சதக இலக்கியங்களின் அமைப்புக்கள்

1. நூறு பாடல்களில் பாடப்பட்டிருத்தல்.

2. புலவர், இறைவனையோ அல்லது தாம் விரும்பிய ஏனையோரையோ

பாட்டுடைத் தலைவர்களாகத் கொண்டு பாடுதல்.

3. நூறு பாடல்களையும் ஒரே யாப்பில் பாடி முடித்தல்

4. நூறு பாடல்களும் ஒரே முடிவை அல்லது ஈற்றடியை மகுடமாகப் பெற்றிருத்தல்

(இது சதக இலக்கியத்தின் பொதுப் பண்பாகும்).

5. நூலின் பெயரில் பாட்டுடைத் தலைவரின் பெயரோ அல்லது பாடப்படுகின்ற

பொருள்களின் - மண்டலங்களின் - தலங்களின் பெயர்களோ அல்லது நூலில்

பாடல் தோறும் ஈற்றடியாக - மகுடமாக அமைந்த தொடரோ இடம்பெற்று

அதனோடு சதகம் எனும் சொல் இணைந்து வரும்

என்பன சதக இலக்கியங்களின் பொதுவான அமைப்புக்களாகும்.

'நபியே எங்கள் நாயகமே'!

கா.மு. ஷெரீப் 'நபியே எங்கள் நாயமே' என்ற நூலில் இஸ்லாமியர்களின் இறுதித் தூதுவரும், இவ்வுலகிற்குச் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் கற்றுத் தந்து, அகில உலக மாந்தர்க்கெல்லாம் அழகிய முன்மாதிரியாய் விளங்குபவருமான நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், போதனைகளையும் எடுத்துக்கூறி அவர்களை வாழ்த்திப் பாடியுள்ளார். இந்நூலுக்கு எம். அப்துல் வஹ்ஹாப், ஏ. அப்துல் ஜலீல், எம்.எம். இஸ்மாயீல், ந. சஞ்சீவி, ம.கா.மு. காதிர் முஹ்யித்தீன் மரைக்காயர், புலவர் கீரன், சிலம்பொலி சு. செல்லப்பன் போன்றோர் முறையே ஆய்ந்துரை, பாராட்டுரை, அணிந்துரை, மதிப்புரை, சாற்றுக் கவி, அணிந்துரை, துய்ப்புரை போன்றவற்றை வரைந்துள்ளனர்.

நூலின் அமைப்பும் பொருளும்

எந்த நூலைப் பாடத் துவங்கும் போதும் கடவுள் வாழ்த்துப் பாடித் துவங்கும் தமிழ் இலக்கிய மரபையொட்டியே இந்நூலிலும் முதலில்,

யாவினுக்கும் மேலவனாம் யாங்கணுமுள் ளவனாம்

யாவையுமே படைத்தவனாம் யாவினுக்கும் வாழ்வை

மேவியளித் திடுபவனாம் மிகுங்கருணை யாளன்

விரிந்துயர்ந்தே ஆழ்ந்தறிவால் அளந்திடற்கே அரியோன்

கூவியழைத் திடுமுன்னம் நாடிநமைக் காக்கும்

கோதில்லா அருளன்பு தன்னகத்தே கொண்டோன்

நாவினிக்க மேலவர்கள் நாளுந்துதித் தேத்தும்

நல்லிறையாம் அல்லாஹ்வை வாழ்த்திடுவாய் நெஞ்சே

என்ற எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த இறை வாழ்த்துப் பாடல் அமைந்துள்ளது. இதனைத் தொடர்ந்து மறை வாழ்த்து, மக்காநகர் வாழ்த்து, கஃபா வாழ்த்து, முத்தலிப் வாழ்த்து, அப்துல்லாஹ் வாழ்த்து, ஆமீனா வாழ்த்து, கதீஜா வாழ்த்து, ஆயிஷா வாழ்த்து, பாத்திமா வாழ்த்து, கலீபாக்கள், சகாபாக்கள் வாழ்த்து, உலகியல் வாழ்த்து போன்ற பதினொரு வாழ்த்துப் பாக்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சார்ந்தவரைப் பற்றி அமைந்துள்ளன. இப்பாடல்களுக்கு அடுத்த பாடலிலிருந்து துவங்கி நூறு பாடல்களில் 'நபியே எங்கள் நாயகமே' (நந்நபி வாழ்த்துப் பாமாலை) என்னும் தலைப்பில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறப்பு, வாழ்வு, வாக்கு, செயல், போதனைகள் மற்றும் இஸ்லாமியக் கருத்து விளக்கம், அவர்தம் இறப்புப் போன்றன எடுத்துரைக்கப்படுவதுடன் படிப்போர் ஒவ்வொருவரும் இஸ்லாம் என்றால் என்ன என்பதை விளங்கிக் கொள்ளும் வகையிலும் அமைந்துள்ளது.

"எல்லாரும் ஓர் குலத்தார் இஸ்லாமவர் மார்க்கம், இறைவனுமே ஒன்றாவான் உரு அவனுக்கில்லை" (பா . 6). "அல்லாஹ் என உண்டொருவன் அவனுக்கிணை யில்லை. அகிலமெலாம் படைத்தளித்துக் காப்பவனும் அவனே" (பா.7), இறைவன் ஒருவனென நம்பி, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அவனுடைய தூதரெனக் கொள்ளுதல், ஐவேளை தொழுதல், 'ஜக்காத்' எனும் தானதர்மம் செய்தல், நோன்பிருத்தல், பொருளிருப்பின் ஹஜ்ஜியற்றல் எனும் இஸ்லாத்தின் ஐம்பெருங் கடமைகள் (பா. 16), நல்லது செய்ய வேண்டும் (பா.22) பிறருக்கும் பகிர்ந்தளித்து உண்ண வேண்டும் (பா.23) உடையுடுத்தும் முறை (பா.24, 25), சிக்கன வாழ்வு (பா.26), "இறைவனிடமில்லாது மற்றையோரிடத்தில், இறைஞ்சிக்கை யேந்துவோர்க்கு மீட்சியென்பதில்லை" (பா.28), ஏழைகளைப் பேண வேண்டும்; மாறாக எள்ளி நகையாடக் கூடாது (பா.32), வறுமையிலே நொந்து கெட்ட போதும் பிறரிடம் கையேந்த வேண்டாம் (பா. 33), உழைக்காமல் வாழ்தல், தனித்துண்ணல், பொய்யுரைத்தல், பித்தலாட்டம், கொலை, களவு (பா. 36), மானிடரைப் புகழ்தல், புறம் பேசல், வீணாகப் பிறருக்கு இடர் செய்தல், இறைவனைத் தவிர பிறருக்கு அடிமையாயிருத்தல் (பா.37), படாடோப வாழ்வு, அடாவடிச் செய்கை, குடிப்பது, நடிப்பது போன்றன இஸ்லாம் நெறியாகா (பா.38), வட்டிப் பண வாழ்க்கையினர், பகைமைக் குணமுடையோர், வெட்டிப் பேச்சுடையோர், கடவுளை நம்பாதார் போன்றோர் இஸ்லாமியராகார் (பா. 39), பெற்றோரைப் பேணல், உழைப்புக்கேற்ற கூலியை உடனே தரல் (பா. 66), பிள்ளைகளை ஒழுக்கமுடன் வாழப் பயிற்றல் பெற்றோரின் கடன் (பா.76) போன்ற நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எடுத்துரைத்து வாழ்ந்து காட்டிய பல்வேறு கருத்துக்களைக் கூறி அவர்களை வாழ்த்தி, இறுதியில் அவர்களின் முழுவாழ்வையும் கவிஞர்,

பிறக்கும்முன் தந்தையரைத் தானிழந்து புவியில்

பிறந்த சில ஆண்டிற்குள் தாயாரை யிழந்து

சிறப்பான கல்வியின்றி மாடாடு மேய்த்துச்

சுற்றத்தார் ஆதரவில் அனாதையென வளர்ந்து

முறைப்படிக்குத் தொழில்செய்து திருமணம்மு டித்து

மூவிரண்டு மகவுபெற்று ஞானவழி சென்று

பெறர்க்கரிய நபிப்பட்டம் பெற்றிட்ட யிறுதிப்

பெருநபியே முஹம்மதரே வாழியரோ வாழி (பா.98)

என்ற ஒரே பாடலில் எடுத்துரைக்கிறார்.

நந்நபி வாழ்த்துப் பாமாலையில் அமைந்துள்ள நூறு பாடல்களிலும் 'முஹம்மதரே வாழியரோ வாழி' என்ற தொடர் ஈற்றுத் தொடராக மீண்டும் மீண்டும் வந்துள்ளது. இதனைத் தொடர்ந்து கவிக்கூற்றாக அவையடக்கப் பாடல் ஒன்று பின்னுரையாக அமைந்துள்ளது. இறுதியாக அமைந்துள்ள பொது வாழ்த்துப் பாடலில் இஸ்லாமிய நெறியில் நிற்போரும். இந்நூலைப் படிப்போரும் வாழ்த்தப்படுகின்றனர். எல்லாப் பாடல்களையும் சேர்த்து இந்நூலில் மொத்தம் நூற்றுப் பதினான்கு பாடல்கள் உள்ளன.

சதக இலக்கியமா?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டமைந்துள்ள 'நபியே எங்கள் நாயகமே' எனும் இந்நூலில் பாடல்களின் எண்ணிக்கை நூறு என்கிற சதக இலக்கிய வரைமுறையைத் தாண்டி அமைந்துள்ளது. இதில் உள்ள எல்லாப் பாடல்களும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பாவிலேயே அமைந்துள்ளன. இந்நூலிலுள்ள 'நந்நபி வாழ்த்துப் பாமாலை' எனும் பகுதியிலமைந்துள்ள நூறு பாடல்களிலும் 'முஹம்மதரே வாழியரோ வாழி' எனும் ஒரே ஈற்றடி முடிபாக மகுடமாக ஆசிரியரால் அமைக்கப் பட்டுள்ளது. இருந்தபோதும் நூலின் பெயருடன் சதகம் எனும் சொல் இணைந்து வரவேண்டும் எனும் மரபிற்கேற்ப இதுவரை வெளிவந்துள்ள சதகங்கள் அனைத்தும் அமைந்துள்ளன. ஆனால் இந்நூல் அவ்வமைப்பிலிருந்து பிறழ்ந்து அமைந்துள்ளது. ஆகவே இந்நூலைச் சதக இலக்கிய வரிசையில் சேர்த்தல் பொருந்தாது; மாறாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது பாடப்பட்ட வாழ்த்துப்பாவாகக் கொள்ளலே சாலும். இவ்வாறு கொள்வதால் இந்நூல் சிற்றிலக்கிய வகையிலிருந்து விடுபடுகிறது.

References

கண்ணன், இரா. சிற்றிலக்கிய ஆராய்ச்சி. முதல் தொகுதி, அப்பர் பதிப்பகம்,

கண்ணன், இரா. சிற்றிலக்கிய ஆராய்ச்சி. இரண்டாம் தொகுதி, அப்பர் பதிப்பகம், 2002.